# A STUDY ON SMALL INDUSTRIES DEVELOPMENT IN MANMUNAIPATTU D.S DIVISION IN THE BATTICALOA DISTRICT

LIBRARY
01 MAR
EASTERN UNIVERSITY, SRI LANKA.

SHANKARY KONALINGAM

FAC629
Project Report
Library - EUSL

DISPLINE OF ECONOMICS
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY
SRILANKA

2009

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| ஆய்வுச்சுருக்கம் | I-II |
| நன்றியுரை | III |
| 1. அத்தியாயம் I | |
| 1.1 அறிமுகம் | |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 1-2 |
| 1.2 ஆய்வுப் பிரச்சனை | 3 |
| 1.3 ஆய்வின் நோக்கம் | 3 |
| 1.4 ஆய்வின் எடுகோள் | 3 |
| 1.5 வரையறைகள் | 4 |
| அத்தியாயம் 2 | |
| 2. நூலாய்வு | |
| 2.1 அறிமுகம் | 5 |
| 2.2 கைத்தொழில் | 5-11 |
| 2.3 முயற்சியான்மை | 11-13 |
| 2.4 அபிவிருந்தி | 13-16 |
| அத்தியாயம் 3 | |
| 3. ஆய்வுமுறை | |
| 3.1 அறிமுகம் | 18 |
| 3.2 தரவு சேகரிப்பு முறை | 18-20 |
| 3.3 தரவு முன்வைப்பும் தரவு பகுப்பாய்வு முறையும் | 20 |
| 3.4 தரவுகள் மதிப்பீடு முறை | 20-21 |
| 3.5 எண்ணக்கருவாக்கம் | 21 |
| அத்தியாயம் 4 | |
| 4. தரவு முன்வைத்தல் பகுப்பாய்வு கலந்துரையாடல் | |
| 4.1. அறிமுகம் | 22 |
| 4.2. தனிப்பட்ட தரவுகள் | 22-26 |
| 4.3. ஆய்வுக்குரிய தரவுகள் | 27-31 |
| அத்தியாயம் 5 | |
| 5. முடிவுகளும் சிபாரிசுகளும் | |
| 5.1. ஆய்வின் முடிவுகள் | 32-33 |
| 5.2. சிபாரிசுகள் | 33-38 |
| 5.3. சுருக்கம் | 38 |
| 5.4. முடிவுரை | 38-39 |
| பின்னிணைப்பு | |
| உசாத்துணை நூல் | |
| வினாக்கொத்து | |

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி மீதான ஓர் ஆய்வு

கோ. சங்கரி

### ஆய்வுச் சுருக்கம்

மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவானது சிறுகைத்தொழிலை மேற்கொள்வதற்கான போதியளவு வளங்களைக் கொண்டிருந்த போதும் அவை இன்று விருத்தியடையாத நிலையில் காணப்படுகின்றன. இவ்வாய்வானது இப்பிரதேசத்திலுள்ள சிறுகைத்தொழில் முயற்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பற்றிய ஒரு மதிப்பீட்டை வழங்குவதுடன் சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் முன்வைப்பதாக அமைந்துள்ளது. மூலதன வசதி, நவீன தொழில்நுட்ப வசதி, வினைத்திறனான முகாமை, உட்கட்டமைப்பு வசதி, சந்தை வாய்ப்ப ஆகிய மாறிகளை அடிப்படையாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாய்வுக்கான தரவுகளை சேகரிப்பதில் முதலாம்தரத் தரவுகளானவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுகைத்தொழில் முயற்சியாளர்களில் எழுமாற்றாக தெரிவுசெய்யப்பட்ட 80 சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வினாக்கொத்து வழங்குவதனூடாக சேகரிக்கப்பட்டது. இரண்டாம் தரத் தரவானது ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சிறுகைத்தொழில்தறை சார்ந்த நிறுவனங்களின் அறிக்கைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. வினாக்கொத்துகள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் வீதாசார அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

இவ்வாய்வின் போது பல்வேறு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டது. அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்கும் பொருட்டு பின்வரும் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. அவையாவன உள்ளீடு தொடர்பாக வங்கிக்கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகளை ஏற்படுத்தல், அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதியுதவியினைச் செய்தல், சிறுகைத்தொழில் தொடர்பாக வங்கிச் சங்கம் ஒன்றினை ஆரம்பித்து சேமிப்பு நடவடிக்கைகளை உருவாக்கி கடன் வசதிகளை வழங்குதல், சிறுகைத்தொழில் தொடர்பான உபகரணங்களை நிறுவன அமைப்புக்கள் வழங்குதல், சமூர்த்தி வங்கிகள் மூலம் கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை மேற்கொள்ளல் போன்றவையாகும்.

நவீன தொழில்நுட்ப வசதி தொடர்பான பிரச்சினைகளுக்கன சிபாரிசுகளாக பின்வருவன அமைகின்றன. நவீன தொழில்நுட்பம் தொடர்பாக மக்களுக்கு விளிப்புணர்வுகளை ஏற்படுத்தல், இது தொடர்பான பயிற்சிகளை வழங்குதல், இக்கைத்தொழில் தொடர்பான இயந்திர வசதிகளை பிரதேச செயலாளர் ஊடாக பெற்றுக்கொடுத்தல் போன்றவையும் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன. முகாமைத்துவ அறிவினை மக்களுக்கு வழங்குதல்,

திட்டமிடலை மேற்கொண்டு அதனடிப்படையில் செயற்படுத்துவதற்கான வழிவகைகளை வழங்குதல், உள்ளீடுகளை பயன்படுத்தும் போது சரியான முறையில் மேற்கொள்ளுதல், போன்றவை தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

உட்கட்டமைப்பு தொடர்பில் பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன. பொருத்தமான வீதி வசதிகளை உரிய அதிகாரிகளினூடாக ஏற்படுத்திக் கொடுத்தல், சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல். (கழிவுகள்) தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்குவதுடன் சந்தைப்படுத்தல் தொடர்பாக சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவினை வழங்குதல், நீண்ட கால அடிப்படையில் சந்தைவாய்பபுகளை உருவாக்குதல், உயர்ந்த விலையினை பெற்றுக்கொள்வதற்காக பொருட்களின் தரத்தினை உயர்த்துதல், சந்தையில் பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கான உத்திகளை கையாளுதல் போன்ற சிபாரிசுகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன். இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதனூடாக சிறுகைத்தொழிலினை அபிவிருத்தியடைந்த ஒரு முயற்சியாக முன்னெடுத்து செல்வதற்கு வழிவகுக்கும்.